**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

அசல் வழக்கு எண் 277/2024 நாள்- 18.08.2025

**வா.சா.1-கண்ணன்**

**வா.சா.1-ன் குறுக்குவிசாரணை பிரதிவாதி தரப்பில்**

நான் பால் மாடு வைத்து பால் வியாபாரம் செய்து வருகிறேன். நான் எம்.ஏ., தமிழ் பட்டப்படிப்பு படித்துள்ளேன். நான் தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்தேன் என் மனைவி இறந்தபின்பு குழந்தைகளை பார்ப்பதற்காக வேண்டி வேலைக்குச் செல்லவில்லை. நான் தனியார்நிறுவனத்தில் 2020-ம் ஆண்டு வரை 11 வருடங்கள் பணிபுரிந்தேன். பிரதிவாதியின் ஆட்டோ மொபைல்ஸ் கடையில் தான் வேலை பார்த்து வந்தேன். நான் முதலில் மெக்கானிக்காகவும் பின்பு வாகனப்பதிவு பிரிவில் வேலை பார்த்து வந்தேன். பிரதிவாதியின் ஆட்டோ மொபைல்ஸ் கடையில் பணம் வரவு செலவு கணக்குகளை நான் பார்க்கவில்லை. பிரதிவாதியின் ஆட்டோ மொபைல்ஸ் கடையில் வேலை பார்க்கும் போது எனக்கு ரூ11,000/- சம்பளம் பெற்று வந்தேன். பிரதிவாதியின் ஆட்டோ மொபைல்ஸ் கடையில் ஆரம்பத்தில் எனக்கு ரூ5,000/- சம்பளம் கொடுத்து வந்தார். பிரதிவாதியின் ஆட்டோ மொபைல்ஸ் கடை மற்றும் ஸ்பின்னிங் நிறுவனம் பிரதிவாதிக்கு சொந்தமானது என்றால் சரிதான். இரண்டு சேர்ந்து பல கோடி மதிப்பு வரும் என்றால் எனக்கு தெரியாது. தற்போது வரை பிரதிவாதி தான் மேற்கண்ட இரண்டு சொத்துக்களையும் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். 2020-2021ம் ஆண்டு பல தேதிகளில் என் மனைவியின் நகைகளை பல தேதிகளில் வங்கியில் அடமானம் வைத்து மேற்கண்ட வழக்கில் கண்ட தொகையை கொடுத்தேன் என்று கூறுகிறேன். நான் இந்தியன் வங்கி மற்றும் கூட்டுறவு வங்கிகளில் நகைகளை அடகு வைத்துள்ளேன். இரண்டு வங்கிகளிலும் எனக்கு சேமிப்பு கணக்கு உள்ளது. நகைக்கடன் பெற்றிருந்தால் சேமிப்பு கணக்கில் பதிவாகும் என்றால் சரிதான்.

சேமிப்பு கணக்கு தற்போதும் நடைமுறையில் இ ரூந்து வருகிறது என்றால்சரிதான். என்னுடைய வங்கி கணக்குகளை பார்த்தால் நகை அடமானம் வைக்ப்பட்ட விவரம் தெரியவரும் என்றால் சரிதான். வங்கி கணக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வங்கி கணக்கு களை பார்த்தால் உண்மை தெரியவரும் என்பதால் தான் நான் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 2020-2021ம் ஆண்டுகளில் பல தேதிகளில் பிரதிவாதிக்கு பணம் கொடுத்தற்கு ஆவணங்கள் முதலில் பெறவில்லை என்றால் சரிதான். நான் கடன் கொடுத்த தேதிகளில் பிரதிவாதி தொழில் செய்து வந்தால் சரிதான். பிரதிவாதிக்கு பல முறைகளில் பணம் கொடுத்தற்கு ஆவணங்கள் பெறாதற்கு காரணம் எ ன்ன என்று கேட்டால் என்னிடம் கடன் வாங்கிக் கொண்டு உடனடியாக திருப்பி செலுத்திவிடுவார் ஆவணம் பெறவில்லை. 2020-2021ம் ஆண்டுகளில் கடனை திரும்பி செலுத்தும் விவரத்தை வழக்குரையில் கூறவில்லை என்றால் சரிதான். 2020-2021ம் ஆண்டுகளுக்கு முன்பாக 4 வருடங்களில் இருந்து பிரதிவாதி என்னிடம் பலமுறை கடன் பெற்று திருப்பிகொடுத்துள்ளார் அந்த விவரத்தையும் நான் என் வழக்குரையில் கூறவில்லை என்றால் சரிதான். ஆட்டோ மொபைல்ஸ் கடையை பிரதிவாதி 2020 க்கு முன்பாக 4 வருடஙகளாக புதிய வாகனங்கள் விற்பனை show room and Work shop வைத்திருந்தார். அந்த 4 வருடங்களில் ஸ்பின்னிங் நிறுவனத்தை பிரதிவாதி ஒத்திக்கு விட்டிருந்தார் என்றால் வாடகைக்கு விட்டிருந்தார். அந்த சமயத்தில் வாகன விற்பனை நன்றாக இருந்தது என்றால் சர்வீஸ் மட்டும தான் நன்றாக இருந்தது விற்பனை நன்றாக இல்லை. அந்த சமயத்தில் வாகன விற்பனை பிரதிவாதிக்கு நன்றாக இருந்தது என்றும், நான் அந்த சமயத்தில் கடன் கொடுத்தாக கூறுவது வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் பல தடவைகளில் பிரதிவாதிக்கு பணம் கொடுத்தில் பிரதிவாதி எனக்கு

வட்டி கொடுத்ததில்லை. ஆனால் நகைக்கடனுக்குண்டான வட்டியை நான் என் சொந்த பணத்தை கட்டி மீண்டும் நகைக்கடன் வைத்தேன் என்றால் சரிதான். நான் என் சொந்த பணத்தை வட்டி கட்டி பிரதிவாதிக்கு வட்டி இல்லாமல் கடன் கொடுத்தேன் என்று கூறுவது நம்பக்கூடியதாக இல்லை என்றால் சரியல்ல. 2020-2021ம் ஆண்டுகளில் நகைக்கடன் வைத்து கொடுத்த கடனுக்கு வட்டி பேசவில்லை என்றால் சரிதான். 2020-2021ம் ஆண்டு மற்றும் அதற்கு முன்பான 4 வருடங்களுக்கு முன்பான கடனுக்கு நான் ஆவணம் எழுதிக் கொடுக்கவில்லை என்றால் கடைசியாக கொடுத்த பணத்திற்கு ஆவணம் எழுதி கொடுத்துள்ளார். ஆட்டோ மொபைல்ஸ் கடையை நான் என் வழக்குரையிலும், முதல்விசாரணையிலும் விற்பனை செய்துவிட்டதாக கூறியிருந்தால் தவறுதான். வாடகைக்கு தான் விட்டுள்ளார். ஆட்டோ மொபைல்ஸ் கடையை வாடகைக்கு விடும் சமயத்தில் வாசாஆ.1 புரோநோட்டு எழுதிக் கொடுத்தார். வாசாஆ.1 ல் வட்டிக்கு கடன் வாங்கியதாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான் அவராக தான் எழுதிக் கொடுத்தார். வா.சாஆ.1 முழுவதையும் பிரதிவாதி தான் எழுதினார். வா.சா.ஆ.1யை பிரதிவாதி எங்கு வைத்து எழுதினார் என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 ஆங்கில மாதம் அல்லது தமிழ் மாதம் போடப்பட்டுள்ளதா என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 ல் கையொப்பம் செய்த நபர்கள் பிரதிவாதியின் ஆட்டோ மொபைல்ஸ் கடையில் வேலை பார்க்கும் நபர்கள் . வாசாஆ.1ல் ரேவன்யூ ஸ்டாம்ப் ஒட்டப்பட்டுள்ளது எவ்வளவு தொகை என்று எனக்கு தெரியாது பிரதிவாதி வாசாஆ.1 ல் 1 கையொப்பம் தான் செய்துள்ளார். வாசாஆ.1ல் பிரதிவாதி எங்கு வைத்து கையொப்பம் செய்தார்என்று எனக்கு தெரியாது. அவராக எழுதி கொண்டுவந்தார். வாசாஆ.1யை எழுதி சாட்சி கையொப்பம் செய்தவர் யார் என்று நான் பார்க்கவில்லை. நான் தாக்கல் செய்துள்ள புரோநோட்டில் எழுதியவர் மற்றும் சாட்சி கையொப்பம் செய்தவர் யார் என்று நான் கவனிக்கவில்லை. புரோநோட்டு எந்த தேதியில்

எழுதிக்கொண்டு வந்து கொடுத்தார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. யார் முன்னிலையில் வா.சா.ஆ.1 கொடுத்தார் என்றால் சாட்சி முத்துப்பாண்டியன் முன்பாக கொடுத்தார். வாசாஆ.1ன் படி உடனடியாக வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் ஒரு மாதத்திற்குள் பணத்தை திருப்பி தருவதாக கூறியதால் தாக்கல் செய்யவில்லை. ஒரு மாதத்திற்குள் திருப்பி தருவதாக கூறியதாக வழக்கில் நான் கூறவில்லை என்றால் சரிதான். காசோலை கொடுத்தார் அந்த காசோலையை நான் வசூலுக்காக தாக்கல் செய்தேன். அந்த காசோலை பணம் ஆகாமல் stop payment என்று திரும்பி விட்டது என்றால் சரிதான். நான் அந்த காசோலை திரும்பியதால் வழக்கறிஞர் மூலம் அனுப்பினேன் என்றால் சரிதான். திருப்பி அனுப்பியதற்கு பிரதிவாதி அவராகவே ஒரு பதில் அனுப்பினார் என்றால் சரிதான். பிரதிவாதியின் நிறுவனத்தில் சிசிடி கேமரா உள்ளது என்றால் சரிதான். நான் பிரதிவாதியின் நிறுவனத்திலிருந்து காசோலை , புரோநோட்டு , வண்டி யின் ஆவணங்கள் மற்றும் சேர் டேபிள் ஆகியவற்றை திருடியதாக தெரியவருகிறது எ ன்றும், என் மீது வழக்கு தாக்கல் செய்தால் குற்ற நடவடிக்கை எடுப்பேன் என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். நான் காசோலையின் மீது ஏன் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் புரோநோட்டின் படி பணம் வந்தால் போதும் என்பதால் காசோலையின் மீது நடவடிக்கை எடுக்கவில்லை. வா.சா.ஆ.4 ல் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் உண்மை என்பதால் தான் பிரதிவாதியின் மீது காசோலை வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. காசோலை அறிவிப்பிற்கு பிறகு பிரதிவாதி என் மீது புகார் கொடுத்ததின் பெயரில் இராஜபாளையம் வடக்கு காவல் நிலைய காவலர் புகார் சம்பந்தமாக கூறியபோது இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று கூறிவிட்டேன். தாவா வழக்கிற்கு முன்பாகவே பிரதிவாதி புகார் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் காசோலை மற்றும் கடன்உறுதிசீட்டை திருடி சென்று பிரதிவாதியின் கையெழுத்தை நான் மோசடியாக யிட்டு

இந்த வழககை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் தான் கடன்உறுதிசீட்டில் கண்ட விவரங்கள் எனக்கு முழுமையாக தெரியவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் கடன் வாங்கவேண்டிய அவசியம் இல்லை என்றறால் சரியல்ல., பிரதிவாதி கோடீஸ்வர் என்றால் சரிதான் அவருக்கு இடம் , வீடு , ஸ்பின்னிங் நிறுவனம் அதிகமாக உள்ளது. பிரதிவாதிக்கு பணம் தேவை இருந்தால் என்னிடம் கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றும், சொத்தை அடமானம் வைத்தோ அல்லது விற்பனை செய்தோ தன்னுடைய பணத்தேவையை பூர்த்தி செய்வார் என்றால் சரியல்ல. எனக்கு கடன் கொடுக்கும் அளவிற்கு வசதி வாய்ப்பு இல்லை என்றும் வழக்கிற்காக நான் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு பொய் வழக்கு என்றும், தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
இராஜபாளையம்.